இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 07-10-2025

# சுயமரியாதைக்கு நூற்றாண்டு

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம், நூற்றாண்டு காண்கிறது. சுயமரியாதை இயக்கத்தின் முதலாவது மாநில மாநாடு நடைபெற்ற செங்கல்பட்டில், நூற்றாண்டு விழாவையும் வெகுசிறப்பாக நடத்திக் காட்டி இருக்கிறார் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். '92 வயது இளைஞர்' என்று அவரைப் போற்றிப் பாராட்டி இருக்கிறார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை இயக்க மாநாட்டுக்கு அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் வருகை தந்தார். சுயமரியாதை இயக்கத்தின் 80 ஆவது ஆண்டு மாநாடு 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற போது அதில் பங்கெடுத்து பெருமை சேர்த்தார் அன்றைய முதலமைச்சர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.**

1925 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது சுயமரியாதை இயக்கம். நூறு ஆண்டைக் கடந்த அந்த இயக்கத்தின் நூற்றாண்டு விழாவில் பங்கெடுத்துள்ளார் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். நூற்றாண்டு விழாவில் முதல் அமைச்சர் ஆற்றிய இருபது நிமிட உரையானது இடியாய் இருந்தது. வெடியாய் வெடித்தது.

மானமிகு ஆசிரியர் அவர்கள், 'பெரியார் உலகமயம்; உலகம் பெரியார் மயம்' என முழங்கி வருகிறார். சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டுக் கருத்தரங்கை ஆக்ஸ்போர்டில் நடத்தி வைத்தும், பெரியார் படத்தை அங்கு திறந்து வைத்தும் உலகமயம் ஆக்கி வருகிறார் மாண்புமிகு முதல் அமைச்சர்.

**"தந்தை பெரியார் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவரை நோக்கி கல் வீசினார்கள். செருப்பு வீசினார்கள்.**

**கத்தி வீசினார்கள். ஆனால் இன்று தந்தை பெரியார் அவர்கள் உலகத்தால் கொண்டாடப்படுகிறார். போற்றப்படுகிறார். இதுதான் பெரியாரின் அறிவுக்குக் கிடைத்த மரியாதை ஆகும்.**

**திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு கிடைத்த மதிப்பு ஆகும்.இன்னும் சொன்னால் மானமிகு ஆசிரியர் அவர்களின் உழைப்புக்கு கிடைத்த பலன் ஆகும்" என்று குறிப்பிட்டார் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.**

பெரியாரின் சிறப்பு என்பது, எந்த சீர்திருத்தக் கொள்கையை அவர் பேசினாரோ, பரப்புரை செய்தாரோ, அதற்காக பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்தாரோ அதே கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை தனது வாழ்வில் நேரடியாகப் பார்த்தார். உலகில் எந்த சீர்திருத்தவாதிக்கும் கிடைக்காத சிறப்பு இது.

**சமூக நீதி,சாதி ஒழிப்பு, மத எதிர்ப்பு, மூடநம்பிக்கைகள் ஒழிப்பு, பார்ப்பனத் தன்மைகள் மீதான தாக்குதல், பெண்களுக்கு சொத்துரிமை, தீண்டாமை ஒழிப்பு, தேவதாசி முறை ஒழிப்பு, அனைத்து பொது இடங்களிலும் பட்டியலினத்தவர்க்கு தடை இருக்கக்கூடாது, நில உரிமை, விதவை மணம், பொதுவுடமை, பொது உரிமை என அந்தக் காலத்தில் பலரும் பேசப் பயந்த பேச்சுகளை பேசத் தொடங்கினார் தந்தை பெரியார்.**

1929 நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் திராவிட அரசியலின் முழுமையை முதன்முதலாக அறிவித்தது. மக்கள் பிறவியில் உயர்வுதாழ்வு உண்டென்பதை மறுத்தல், வருணாசிரமத்தை ஏற்கக் கூடாது, அனைத்து இடங்களையும் அனைவரும் பயன்படுத்தலாம்; எந்தத் தடையும் யாருக்கும் இருக்கக் கூடாது, ஜாதிப்பட்டம் போடக்கூடாது, தீண்டாதாருக்கு இலவசக் கல்வி தர வேண்டும், காலியாகும் வேலையில் தீண்டாதாருக்கு முன்னுரிமை தர வேண்டும், பெண்களுக்கு ஆண்களைப் போலவே சொத்துரிமை தர வேண்டும், பள்ளி ஆசிரியர்களாக பெண்களை அதிகம் நியமிக்க வேண்டும், சாதிவேறுபாடு பார்க்கும் உணவு விடுதிகளின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும், ரயில்வே உணவு விடுதிகளில் ஜாதி வேறுபாடு இருக்கிறதா எனக் கண்காணிக்க வேண்டும் – ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு கொள்கையானது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அரசமைப்பு சட்டத்திலேயே இடம் பெறுவதை பெரியார் கண்டார். பட்டியலின, பிற்படுத்தப்பட்டோர் கல்வி, வேலை வாய்ப்பில் நுழைவதை பெரியார் பார்த்தார். சாதிப் பட்டங்கள் உதிர்ந்தன. அனைவர்க்கும் அனைத்து இடங்களும் பொதுவானதாக மாறின. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வியின் மூலமாக, வேலைகளின் மூலமாக, அதிகாரம் பொருந்திய பதவிகளின் மூலமாக தலைநிமிர்ந்தார்கள். பெண்கள் அனைத்து இடங்களுக்கும் முன்னேறி வருவதைப் பார்த்தார். பொட்டு கட்டுதல் என்ற மாபெரும் இழிவு துடைக்கப்பட்டது. சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும் என்பதை முதல் அமைச்சர் அண்ணா உருவாக்கிக் காட்டினார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை உருவாக்கிக் கொடுத்தார் முதல் அமைச்சர் கலைஞர்.

பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு என்ற சட்டத்தை முதல் அமைச்சர் கலைஞர் உருவாக்கித் தந்தார். அரசுப் பணிகளில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கினார் கலைஞர்.

**இதன் தொடர்ச்சியாக 'திராவிட மாடல்' முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆன காட்சியைப் பார்க்கிறோம். பெண்களும் அர்ச்சகர் ஆகி இருக்கிறார்கள். பெரியார் பிறந்தநாளும், அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளும் மாநிலமே உறுதிமொழி எடுக்கும் நாட்களாக மாற்றப்பட்டுள்ளது. 'காலனி' என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது. சாதி விடுதிகள், 'சமூகநீதி' விடுதிகள் ஆகி இருக்கிறது. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. சமூகநீதி சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஆணையமே அமைக்கப்பட்டுள்ளது.**

ஒரு கொள்கைக்கான ஆட்சியாக, கொள்கையை சரியாகப் பின்பற்றுகிறோமா என்பதை கண்காணிக்கும் ஆட்சியாக 'திராவிட மாடல்' ஆட்சியை வடிவமைத்து நடத்தி வருகிறார் மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"மானமிகு ஆசிரியர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ள மாநில மாநாட்டுத் தீர்மானங்களைப் பார்த்தேன். சமூகக் களத்தில் நீங்கள் அதற்கான பரப்புரையைச் செய்யுங்கள். திராவிட முன்னேற்றக் கழகமானது ஆட்சியைப் பயன்படுத்தி சட்டங்களாக, விதிமுறைகளாக, நெறிமுறைகளாக வகுப்போம்" என்று உறுதிமொழி அளித்துள்ளார் முதல் அமைச்சர் அவர்கள்.

**இது சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா மட்டுமல்ல. சுயமரியாதைக் கொள்கையின் வெற்றி விழா ஆகும். சுயமரியாதைச் சமூகமாக மாறி வருவதன் அடையாளம் ஆகும். 'சுயமரியாதை உலகு' என்பாரே பாவேந்தர். அத்தகைய 'சுயமரியாதை உலகை' நோக்கிப் பயணப்படுவோம்!**

**'சுயமரியாதை' என்ற சொல்லே அனைவருக்கும் வேண்டிய சொல் ஆகும். அதுவே வெல்லும் சொல் ஆகும்!**



புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சுகாதார வட்டாரம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பொம்மாடிமலை, பி.எஸ்.கே மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாமினை, அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் 4.10.2025 அன்று துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன், எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ., அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ராம்கணேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# அத்தைக்கு மீசை முளைக்கட்டும் - பார்த்துக் கொள்ளலாம்!

## வேலூர் காட்பாடியில் அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

வேலூர், அக். 7 -

வேலூர் மாவட்டம் காட்பாடி பகுதி திருவள்ளுவர் நகர், ஜோதிநகர் பகுதியை சார்ந்த 45 பயனாளிகளுக்கு சிறப்பு வரன்முறை படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.7.20 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் விழா நடந்தது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி தலைமை தாங்கி பேசினார். வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணைமேயர் எம்.சுனில்குமார் மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயனாளிகளுக்கு பட்டாக்களை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கி பேசியதாவது;

தமிழ்நாடு முதலமைச்சராகதளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் சிறப்பு வரன்முறை திட்டத்தை கொண்டு வந்து இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கி வருகிறார்கள். 45 பயனாளிகளுக்கு அதன் அடிப்படையில் இப்போது வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட கால பிரச்சினை தற்போது தீர்க்கப் பட்டுள்ளது. இந்த காட்பாடி தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் பாலங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், சாலைகள் என பல்வேறு வளர்ச்சி பணிகள் செய்யப்பட்டுள்ளன.



இந்த தொகுதி மேன்மை அடைய வேண்டும்என்பதற்காக இது போன்ற மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து செய்து வருகிறேன். காட்பாடி தொகுதியில் உள்ள பிற பகுதிகளை சார்ந்த பொது மக்களுக்கும் இந்த திட்டத்தின்கீழ் படிப்படியாக வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப் படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் காட்பாடி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் எஸ்.சரவணன், மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன், வேலூர் உதவி கலெக்டர் செந்தில் குமார், காட்பாடி தாசில்தார் ஜெகதீஸ்வரன், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.தணிகாசலம் மாமன்ற உறுப்பினர்கள் ஜி.சித்ராலோகநாதன், ஜி.ரவிக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டிடாசரவ ணன், மாநகர மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்வியும், அதற்கு அவர் அளித்த பதிலும் விவரம் வருமாறு;

**கேள்வி:** கரூர் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணையை அதிகாரிகள் மேற்கொள்ளாவிட்டால் 2026ல் அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எடப்பாடி பழனிச்சாமி பேசி இருப்பது குறித்து?.

**பதில்:** அத்தைக்கு மீசை முளைக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம்.

**கேள்வி:** தி.மு.க அரசை வீட்டிற்கு அனுப்பும் நேரம் நெருங்கி விட்டதாக ஜி.கே.வாசன் எம்.பி. கூறி உள்ளாரே?.

**பதில்:** சிங்கிள் ரூமுக்குள்ள கட்சியின் செயற்குழுவை நடத்துபவர்களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது.

**கேள்வி:** உளவுத்துறை கருத்து கேட்டு நடவடிக்கை எடுப்பதாக வெளியான தகவல் குறித்து?.

**பதில்:** உங்களுக்கு டைட்டில் வேண்டும் என்பதற்காக ஆதாரமற்ற எதையும் என்னிடம் கேட்காதீர்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கண்ணூத்து ஏரிக்கு காவேரியில் வெள்ளக் காலங்களில் கிடைக்கும் உபரிநீரை

# நீரேற்றம் மூலம் கொண்டு செல்லும் திட்டத்திற்காக பொன்னணியாறு அணையில் ஆய்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி — நேரில் மேற்கொண்டார்!

திருச்சி, அக். 7 -

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் முன்னிலையில் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பொன்னணியாறு அணை மற்றும் திருச்சிராப் பள்ளி மாவட்டம், மணப் பாறை வட்டம், கண்ணூத்து ஏரிக்கு காவேரியில் வெள்ள காலங்களில் கிடைக்கும் உபரிநீரை நீரேற்றம் மூலம் கொண்டு செல்லும் திட்டத்திற்காக 4.10.2025 அன்று பொன்னணியாறு அணையை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக்குப் பின் அவர் தெரிவித்ததாவது:-

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பொன்னணியாறு அணை மற்றும் திருச்சிராப் பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், கண்ணூத்து ஏரிக்கு காவேரியில் வெள்ள காலங்களில் கிடைக்கும் உபரிநீரை நீரேற்றம் மூலம் கொண்டு செல்லும் திட்ட த்திற்காக ஆய்வுப் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.83.00 இலட்சம் ஆகும்.

காவேரி வடிநிலத்தில் பொன்னணியாறு அணை, செம்மலை மற்றும் பெருமாள் மலைகளுக்கிடையே மணப்பாறையிலிருந்து 25 கிமீ தொலைவிலும், வையம்பட்டியிலிருந்து 10 கிமீ தொலைவிலும் உள்ளது. கண்ணூத்து ஏரி திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், எலமணம் கிராமத்தில் அமைந்துள்ளது.

தற்பொழுது இந்த பொன்னணியாறு அணை மற்றும் கண்ணூத்து ஏரிக்கு வரும் நீரின் அளவு பல காரணங்களால் மிகவும் குறைந்து விட்டது. கடந்த 2005-ஆம் ஆண்டு நீர் முழு அளவை எட்டியது. அதன் பின் நீர் வரத்து கணிசமாக குறைந்துள்ளது.

எனவே இப்பகுதி விவசாயிகள் தங்கள் குடிநீர் விவசாயம் கால்நடைகளுக்கு தேவை யான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய அமராவதி காவிரியில் இருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டி கோரிக்கை வைத்தனர்.

பொன்னணியாறு அணை மற்றும் கண்ணூத்து ஏரிக்கு காவிரியிலிருந்து தோராயமாக 54.50 கிமீ தொலைவிலும், காவிரியின் படுகை மட்ட அளவை காட்டிலும் தோராயமாக 195 மீ. வேறுபாட்டிலும் அமைந்துள்ளது.

காவேரியில் கிடைக்கும் உபரி நீரினை நீரேற்றம் மூலம் சாத்தியமான வழிகளில் பொன்னணியாறு அணை மற்றும் கண்ணூத்து ஏரிக்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வெள்ள காலங்களில் குறிப்பிட்ட அளவு நீரினை பொன்னணியாறு அணை மற்றும் கண்ணூத்து ஏரிக்கு வழங்குவதன் மூலம் பாசனங்கள் முறைப்படுத்தப் படுவதுடன் நிலத்தடி நீர் செறிவூட்டுதற்கும் உதவியாக இருக்கும்.

முகவனூர், செக்காணம், பாளையகோட்டை மற்றும் எலமணம் ஆகிய கிராமங்கள் பயன்பெறுவதுடன் பொன்னணியாறு அணையின் 2101 ஏக்கர் மற்றும் கண்ணூத்து ஏரியின் 733 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும்.

மணப்பாறை பகுதி விவசாயிகள் மற்றும் பாசன சங்கங்களின் கோரிக்கையை பரிசீலித்து பொன்னணியாறு அணை மற்றும் கண்ணூத்து எரிகளுக்கு நீர் வழங்குவதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ள ரூ.83.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு தயாரிக்கப் பட்டு தலைமை பொறியாளர் திட்ட உருவாக்கம் சென்னை அவர்களிடமிருந்து மேல்நடவடிக்கைக்காக அரசுக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாநிலங்களவை உறுப்பினர் திருமதி ராஜாத்தி (எ) கவிஞர் சல்மா, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல் சமது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரணி, ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன், தலைமைப் பொறியாளர் பொறி.எஸ்.சிவக்குமார், கண்காணிப்பு பொறியாளர் பொறி.சுகுமாரன், செயற்பொறியாளர் பொறி.எஸ்.ஜே.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர் பொறி.இளங்கோ, தமிழ்நாடு ஏரி மற்றும் ஆற்று பாசன விவசாய சங்க மாநில தலைவர் விஸ்வ நாதன், அரசு அலுவலர்கள், விவசாய பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் சிலப்பதிகார அரங்கம் அமைக்கும் இடம்!

## ஆட்சியர் துர்கா மூர்த்தி — ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. ஆய்வு!

நாமக்கல், அக். 7 -

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் சிலப்பதிகார அரங்கம் அமைக்கும் இடத்தினை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அர்த்த நாரீசுவரர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் தேர்த்திரு விழாவோடு கண்ணகி விழாவும் கொண்டாடப் பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, திருச்செங்கோட்டில் கண்ணகியின் வரலாறு மற்றும் சிறப்புகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெற ஏதுவாக, சிலப்பதிகார அரங்கம் அமைத்திட, தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

மேலும், சிலப்பதிகார அரங்கம் அமைத்திட ஏதுவாக இடத்திற்கான இசைவாணை திருச்செங்கோடு நகராட்சி மூலம் பெறப்பட்டுள்ளது. அந்த வகையில், திருச்செங்கோட்டில் சிலப்பதிகார அரங்கம் அமைக்கும் இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, திருச்செங்கோடு நகராட்சி நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, திருச்செங்கோடு சார் ஆட்சியர் அங்கித்குமார் ஜெயின், திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் எ.அருள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தே.ராம்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், வீரணம்பாளையம் ஊராட்சியில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, காங்கேயம் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.கே.சிவானந்தன், நகர்மன்றத் தலைவர், நகர இளைஞர் அணி அமைப்பாளர் சூர்யபிரகாஷ் உள்பட பலர் உள்ளனர்.